REGD No. M 4642

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10. | 2-9-51 | இதழ் 10.

ங்கள் செங்கற்பட்டு காங்கிரஸ்
யக் கமிட்டியிலிருந்து விலகிக்
ள்கிறோம். தமிழ்நாடு காங்கிரஸ்
வர் காமராஜரின் சர்வாதிகாரப்
க்கைக் கண்டிப்பதின் அறிகுறி
எங்கள் பதவிகளை ராஜினமா
கிறோம்.

சங்கற்பட்டில், பதினைந்துபேர்
ஜினமா செய்துள்ளார்கள்.

அவர்களுக்கு தலைவர் காமராஜின்
சர்வாதிகார போக்கு பிடிக்க
லை.

மராஜைப் பிடிக்கவில்லை காங்
சை விடுகிறார்கள்!

ஆனால் அவர்கள்காமராஜருக்காக,
ங்கிரசில் இல்லை!

காமராஜர், இப்பொழுது தலை
க இருப்பவர். தலைவராக வந்த
அருக்கு முன்னால் தலைவர்
ந்ததுண்டு. இனியும் வேறு
வர்கள் வரக்கூடும்.

ஆகவே, அவர்கள் காங்கிரசை
, காமராஜர் காரணமில்லை!
ங்கிரஸ் இனி பயனில்லையென்று
தியே ராஜினமா செய்து விட்
னர்!

காமராஜரை எதிர்த்து, பதி
ந்து பேர் ராஜினமா!

* * *

காங்கிரஸ் இந்த நாட்டிற்கு தேவை
ற திருக்கூட்டம் ஆகிவிட்டது.
ருக்கூட்டம் என்று பழைய பாசத்
ல் பேசினாலும், அது தீயரின் கூட்
ம், இன்னுங் கொஞ்சம் உண்மை
யச் சொல்லப்போனால், திருடர்
ரின் கூட்டம் என்றே கூறவேண்
அங்கு திருடர்கள் ராஜ்யத்தில்

ராஜினமா

நாங்களும் இருப்பதென்பது முடி
யாது. நல்லவர்கள் நாளும், அதனால்
தான் வெளியேறிக்கொண்டிருக்கிறார்
கள், வெகு வேகமாக! நாங்களும்
வெளியேறத் தீர்மானித்துவிட்டோம்.
குண்டூர் பகுதியைச் சேர்ந்த நாங்கள்
ஐந்து பேரும், காங்கிரஸ் கட்சியில்
வகித்துவந்த பதவிகளை ராஜினமா
செய்கிறோம்.

இப்படி அவர்கள் பேசவில்லை—
செயலில் காட்டினார்கள்!

அவர்கள் ஐந்துபேரும் பதவி
களை ராஜினமா செய்துவிட்டு, காங்
கிரசைக் கைகழுவிவிட்டார்கள்!

ராஜினமா செய்திருக்கிறார்கள்!
தாங்கள் விரும்பி ஏற்ற பதவியை,
வெறுப்புற்று தாங்களே உதறி யெறி
வதுதான் ராஜினமா—அப்படித்தான்
வீசி யெறிந்திருக்கிறார்கள்!

ராஜினமா, இன்று, மிகப் பிர
சித்தமாகிவிட்டது!

அதுவும், காங்கிரஸ் கூடாரத்தில்
அது சர்வ சாதாரணமாகிவிட்டது!

முடியிலிருந்து அடிவரை, எங்
கும்,எப்பொழுதும்ராஜினமா என்ற
குரல் கேட்டபடிதானிருக்கிறது!

காங்கிரஸ் கட்சியிலிருந்து ராஜி
னமா செய்தவர்கள் யார்யார் என்று
கூறுவதைவிட, எவர் எவர் இன்ன
மும் காங்கிரசில் ஒட்டிக்கொண்டுள்
ளவர்கள் என்பதைக் கூறுவது
எளிது!

காங்கிரஸ் கட்சிக் கோட்டை

யிலே, ராஜினமா கடிதங்கள் மலை
போலக் குவிந்து கிடக்கின்றன.

ஐம்பது பேர் மட்டுமல்ல! இம்
மாதிரி கூண்டோடு வெளியேறி
யோர் ஆயிரமாயிரம்!

செங்கற்பட்டு பதினைந்து, குண்
டூர் ஐம்பது இந்தவார ராஜினமா
கணக்கு!

* * *

ராஜினமா வளர்கிறது. அதுவும்
நேரு, காங்கிரஸ் கமிட்டியிலிருந்
தும், பார்லிமெண்டரி போர்டிலிருந்
தும் ராஜினமா செய்ததிலிருந்து,
இந்த ராஜினமா கதை தொடர்
கிறது.

நேரு, காங்கிரஸ் காரியக்கமிட்டி
யைத் திருத்தியமைக்கச் சொன்
னார்.

தாண்டன் அதற்கு இசைய
வில்லை. ஆனால் நேருவைச் சந்தித்
தார்.

நேருவோ, தான் விரும்பியதை
தாண்டன் நிறைவேற்றியே ஆக
வேண்டும் என்று உறுதியாகக் கூறி
விட்டார்.

தாண்டன், என் தலைமைப் பத
வியை ராஜினமா செய்தாலும்
செய்வேனே யொழிய, காரியக்
கமிட்டியைக் கலைத்திடவோ, மாற்
றிடவோ மனம் சகியேன் என்று
கூறிவிட்டார்.

தாண்டன் பக்கம் ஒரு சிறு
படை, நேரு பக்கம் ஒரு சேனை—
இரண்டிற்கும் மோதுதல் நடந்து
கொண்டேயிருக்கிறது!

நேரு ராஜினமாவால், அதிர்ச்சி
ஏற்படுத்தினார்.

ஆகவே, காங்கிரசுக்கு இப்

பொழுது பிடித்துள்ள நோய்க்கு ஏற்ற மருந்து என்கிறார்.

ஆனால், தாண்டனோ, தன் தலைமைப் பீடத்தின் கௌரவத்தை விட்டுக் கொடுக்க மனமில்லை.

தாண்டன் ராஜினாமா செய்யட்டுமே, என்ற குரல் பெரிதாகிக் கொண்டிருக்கிறது.

அதுபோலவே, நேரு, இப்படி செய்யக் கூடாது. அவர் மேருவாக இன்று வளர்ந்திருக்கலாம். ஆனாலும் தலைவரிடம் பணிந்துதான் நடந்திருக்க வேண்டும்! காங்கிரசால் தான் நேரு, வளர முடிந்தது. அந்தக் காங்கிரசின் தலைவருக்கு தலை வணங்குவதில் தவறில்லை யென்ற முணுமுணுப்பும் சில இடங்களில் இல்லாமலில்லை!

நேரு, காங்கிரசை துச்சமாக நினைக்கிறார்.

அவர் காங்கிரசை அலட்சியமாகக் கருதுகிறார்.

இல்லாவிட்டால், காங்கிரஸ் தலைவரை எதிர்ப்பாரா?

அவர் தனக்கு வளர்ந்திருக்கிற செல்வாக்கால், காங்கிரசை தன் விருப்பம் போல் ஆட்டிவைக்கலாம் என்று எண்ணுகிறார்.

அதனால் தான் அவர் காங்கிரஸ் பதவிகளை ராஜினாமா செய்தார்.

அவர் உண்மையில், காங்கிரஸ் பதவியைவிட, சர்க்கார் பதவி உயர்ந்ததென்று எண்ணுகிறார்.

காங்கிரசைவிட, ஆட்சியுரிமை, கிடைத்தற் கரியதென்றெண்ணுகிறார்.

பின், காங்கிரஸ் இவ்வளவு சலனை பின்னும், அதனை செப்பனிட வழி வகுக்காமல், ஆட்சிபீடத்திலே ஒட்டிக் கொண்டிருப்பானேன்?

காங்கிரஸ் பதவிகளை உதறித் தள்ளிய அவர், ஆட்சிப் பதவிகளை அலட்சியமாக எறிந்திருக்கலாமே! ஏன் செய்யவில்லை?

முதல் மந்திரிப் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, காங்கிரசை சீர் செய்யப் போகிறேன் என்று சொல்லக் கூடாதா, நேரு?

ஆம், அவர் காங்கிரசை மதிக்கவில்லை! கவனிக்கவில்லை!

ஏறிய ஏணியை எட்டி உதைக்

மிதந்து வந்த படகையே, ஓட்டை போடுகிறார்!

கூர் தீட்டிய மரத்தையே, கூர் பார்க்க முனைகிறார்!

முதல் மந்திரி பதவியைத் தந்தது காங்கிரஸ்—அதிலிருந்து அலட்சியமாக ராஜினாமாவை வீசியெறிகிறார்!

ஆனால், மந்திரிப் பதவியை விடவே இல்லை!

இந்தப் பதவியோ, நீடிக்கக் கூடியதுமில்லை, சாசுவதமானதுமில்லை!

அடுத்து பொதுத் தேர்தல் வருகிறது. அதில் இவர்களே வருகிறார்களா, இல்லையா என்பதை இப்பொழுது தீர்மானிக்கத் தேவையில்லை!

அது மட்டுமில்லை. ஆட்சி நரம்புகளிலே இளமை இரத்தம் ஓட வேண்டும் என்றார் நேரு. அதற்குதான் இடங்கொடுத்து ஒதுங்க தயார் என்று கூறியுள்ளார்.

நிலையில்லாத இந்தப் பதவியை வீச மனமில்லை.

காங்கிரஸ் பதவியிலிருந்து விலகுகிறார்! ராஜினாமா செய்கிறார்!

அப்பொழுது, காங்கிரஸ், மந்திரிப் பதவியை விடவா, மோசமான ஆயுள் கொண்டது!

காங்கிரஸ் பதவிகளை வீசியடித்தது, வேதனை தரக் கூடியது!

மந்திரி பதவியை தூக்கி யெறியாதது, விசித்திரமானது!

அவரை அந்த அளவிற்கு உயர்த்திய காங்கிரசை, கேவலப் படுத்தி விட்டார்.

வரம் தந்த ஆண்டவனிடமே, வரப் பரிட்சை செய்ததாக கூறும் புராணக் கதைக்கு பிரத்தியட்ச சாட்சியாகிறார் நேரு.

செல்வாக்கு தந்த காங்கிரசின் தலையிலேயே, அந்த செல்வாக்கு பலிக்கிறதா என்று பரீட்சை பார்க்கிறார்!

இல்லாவிட்டால், காங்கிரசின் தலைவர் தாண்டனை, அவர் அவ்வளவு வருந்த விட்டிருப்பாரா?

சென்றேன், கெஞ்சினேன், மன்றாடினேன், வருத்தத்துடன் வெளியேறுகிறேன் என்று காங்கிரஸ் தலைவரை கண்கலங்க விடுவாரா?

இவை, நாம் எழுப்பும் கேள்வி

பலர் உள்ளங்களில் எழு எழும்பி, அமிழ்ந்திடும் அலைகள் உள்ளன, அவர்கள் பகுதியி அவைகளையே நாம் காட்டியு ளோம்.

மத்தியப் பிரதேச உள்நா மந்திரி மிஸ்ரா, இந்த அலையோ யின் இன்றைய எதிரொலி.

அவர் நேருவை ஒரு சர்வா காரியென்கிறார்.

அந்த சர்வாதிகாரியை எதிர் டும் முயற்சியிலே முழு மூச்சோ ஈடுபடுவதென்று முடிவு செய் விட்டதாக அறிவிக்கிறார்.

அதுமட்டுமல்ல, அவர் மந்திரி பதவியையே ராஜினாமா செய்கிற

காங்கிரஸ் ஆட்சி வந்த பிற மத்திய மந்திரி சபையிலிருந் இதுவரை ராஜினாமா செய்தவர்க எவரும், இந்த ஆட்சியின் கோ லைக் காட்டாமல் சென்றதில்லை.

சர். ஆர். கேயிலிருந்து, கித்வா முடிய, ஒவ்வொருவரும், ஒவ்வொ கோணத்திலிருந்து ஆட்சியி கோணலை எடுத்துக் காட்டின தங்கள் ராஜினாமாக்கள் மூலம்!

அதுபோலவே, மாகாண ஆ களிலும், இந்த சரித்திரம் முறை திரும்ப திரும்பப் படிக் பட்டே வந்தது!

மிஸ்ரா, மத்தியப் பிரதேச உ நாட்டு மந்திரி.

அவர் காங்கிரசிலிருந்து நீண் காலம் பணியாற்றியவர்.

நேரு, தாண்டன் ஆகியோர் மா ணப் பிரமுகர்களாக இருந்த பொ திலிருந்து அவர் தொண்டு செய் வந்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

முன்னேற்றக் கருத்துகள்!
தீவிர எண்ணக் கோர்வை!
அச்சமற்ற ஆதாரங்கள்!
அசைக்க முடியா ஆதாரங்க

போராட்டம்
திராவிட வார இதழில்

விபரங்கட்கு:-
போராட்டம்
திருவத்திபுரம், வ.

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு.

தோழர்களே,

நானும், எனது நடிக நண்பர்களும், மாநில மாநாட்டில்,

சாக்ரடீஸ்

சந்திரோதயம்

ஜமீன் மாளிகை

முதலிய புதிய நாடகங்களை நடத்த ஏற்பாடுகள் செய்து வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

கே. ஆர். இராமசாமி

2-ம் பக்கத் தொடர்ச்சி

அவர் நேருவை சர்வாதிகாரி யென்கிருர்.

அவர் காங்கிரசை விடப் பெரியவரல்ல, அவர் காங்கிரசுக்கு வைத்தியம் சொல்கிருர், அதுவே, தான் காங்கிரசை விட உயர்ந்தவர் என்பதைக் காட்டிக் கொள்ள அவர் கையாளும் முறை, இது தவறு சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் நேருவை பகிரங்கமாக குற்றஞ்சாட்டுவது மட்டுமல்ல, அவருக்கு அதனுல் இன்னல் பல வரும் என்று தெரிந்தே இதில் இறங்கியிருப்பதாகத் துணிவோடு தெரிவிக்கிருர்.

நேருவின் குழுவினர், டெல்லியிலிருந்து,முதலில் பட்டேலைக் குறை கூறியபடியிருந்தனர். ஏனெனில், அவர் தாண்டனை ஆதரித்தார் என்பதற்காகவே! இப்போது தாண்டனைத் தாக்கியபடியுள்ளனர்!

முதலில் சகித்தோம், இனிச் சகியோம்! இதோ என் ராஜினமா என்று நீட்டிவிட்டார்.

தி. மு. க.

இரண்டாம் ஆண்டு

தனி மலர்

23—9—51ல் வருகிறது.

இதில்,

கா. அப்பாதுரை எம்.ஏ.எல்.டி.
சாமி சைவல்யம்
சி. என். ஏ.
நெடுஞ்செழியன் எம். ஏ.
என். வி நடராசன்
மதியழகன் பி. ஏ.
மு. கருணநிதி
கண்ணதாசன்
செழியன்
வாணன்
இராதாமணளன்
அரங்கண்ணல்
தில்லை-வில்லாளன்

மற்றும் பலர் எழுதுகின்றனர்.

விலை எட்டணு,

மழையை வரவழைத்து சுபீட்சத்தை அழைத்துவர யார் முன்வந்தாலும், நான் என் பதவியை ராஜிஞமா செய்யத் தயார்!

சென்னை முதல் அமைச்சர், கனம் குமாரசாமி ராஜா, இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

மழையை அழைத்திடுவோர் வந்தால் அவர் ராஜிஞமா செய்கிருராம்! ஆகா, எவ்வளவு பெரிய தியாகம்!

இன்னும் எத்தனை தினங்களுக்கு இந்த மந்திரி நாற்காலியில் அலங்காரப் பொம்மையாக அவர் இருக்கப் போகிருர் என்பது நமக்குத் தெரியாததல்ல.

இருந்தாலும், கூவியழைக்கிருர், மழையை அழைப்போர் இருந்தால் ராஜிஞமா செய்கிறேன் என்று!

முதலில், அவர் புரிந்து கொள்ள வேண்டும், சுபீட்சம், மழை இல்லாததால் மட்டுமல்ல, மழை இல்லாத நேரத்தில், ஏற்படும் நெருக்கடியை எப்படிச் சமாளிப்பதென்று ஆய்ந்தறிந்து கண்டு கொள்ளும் திறம், இந்த ஆட்சியாளர்களுக்கில்லாததாலுங்கூட!

காங்கிரஸ் மந்திரிசபை மழையை இழுத்து வரவேண்டும் என்று யாரும் குறிப்பிடவில்லை.

மழை இல்லை, ஆகவே, இந்த நேரத்தில் என்ன செய்யவேண்டும் என்று தெரிந்து பணியாற்றுங்கள் என்று கேட்டனர், எதிர்க் கட்சிகள்.

மழையில்லை, வளமில்லை, விளைவில்லை, ஆகவே உணவில்லையென்று உட்கார்ந்து கொண்டிருந்த நேரத்தில், வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழையுங்கள் என்று கூறிய பொழுது, சுயதேவை பூர்த்தியென்று பேசினர்.

அதற்காக இவர்களைக் கண்டித்தார்கள்.

இவர்கள் மழையை தரும் வருண தேவர்களாகவில்லையே என்று யாரும் கண்டிக்கவில்லை.

மேகங்களை ஏவிவிடும் இந்திரனக வேண்டும் என்று சொல்லவில்லை.

மேலை நாடுகளிளில் அந்த வகையிலும் வெற்றி யடைந்திருந்தாலும்,

இவர்களிடம் அத்தகைய மழை வழைக்கும் விஞ்ஞான அற்புதம் கேட்கவில்லை.

ஆனலும், சென்னை முதல் அமைச்சர் அப்படிப் பேசுகிருர்.

அத்தோடு நிறுத்தாமல் ராஜிஞமா செய்கிருராம் அவர்!

நாட்டோருக்கு நன்ருகத் தெரிந்துபோன உண்மைகள் உண்டு.

காங்கிரஸ் கட்சிப் பதவி உதிர்ந்திடும் மலர்கள் இன்று!

காங்கிரஸ் ஆட்சி பதவி அந்த மலர்களால் தொடுக்கப்பட்ட சரம், அந்தி நேரத்தோடு சரி, விடிந்தால் வாடிவிடும்! விடிவதற்குள் தூக்கியெறிகிருர்கள்!

ஆகவேதான் ராஜிஞமா, அவர்கள் ராஜ்யத்தில் இப்படி கண்காட்சி சரக்காகிவிட்டது.

நிலையற்றவர்கள் நிறைந்துள்ள இந்த ஆட்சியில் வேறு எதைத்தான் பார்க்கமுடியும்!

★

விளம்பர விகிதம்

★

கலம் அங்குலம் 1-க்கு ரூ. 4—0

அரைப் பக்கம் ரூ. 100—0

முழுப் பக்கம் ரூ. 200—0

* விளம்பரங்கள் அனுப்பு முன் எழுதிக் கேட்டு பின் அனுப்பவும்.

* முன் பணத்துடன் அனுப்பப்படும் விளம்பரங்களே ...னிக்கப்படும்.

* விளம்பரங்களின் விஷயம் அளவு, காலம் இவற்றை அனுசரித்தே ஏற்றுக்கொள்ளப்படும்.

விளம்பர மானேஜர்

கல்கி ஆபீஸ் பக்கம்!

★

"ஆமாம், ஓய்! என்ன இது, அவர் வாயைத் திறக்கக்காணுமே—ஒரு வார்த்தைகூடப் பேசக்காணும்!!"

"எவர்?"

"என்ன ஓய்! இது அவர்தான்—நம்ம கிழூர்தான்......";

"ஓஹோ! அவரைப்பற்றியா...!"

"ஊர் அமக்களப்படறது—எங்கும் இதே பேச்சு—ஒவ்வொருவர், ஒவ்வொரு விதமான அபிப்பிராயம் சொல்றா, நானும் இந்தப் பத்து நாளா, பேப்பரைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறேன், இவர் என்ன சொல்றார்னு...சுப்சிப்......வாயை மூடிண்டிருக்காரே......"

"ஆமாம்.......மௌனமாத்தான் இருக்கார்"

"ஏன்"

"ஏன், பேசணும்!"

"என்ன ஓய், 'பாம்' போடறீர். ஏன் பேசணுமா! இவர் பேசாமலிருக்கலாமோ! பிரச்னை பிரமாதமானதல்லவோ?"

"பிரமாதமான பிரச்னைதான்!"

"ஆபத்தானது அல்லவோ?"

"ஆபத்தானதுதான்......ஆனால் ஆபத்து, யாருக்கு!"

"ஓய்! இப்படிப் பேசிண்டிராதேயும். நாடு நடுங்கறது, காங்கிரசிலே ஒரே கலக்கம், பிரதம மந்திரிக்கும் அகில இந்திய காங்கிரஸ் தலைவருக்கும் தகராறு — பெரிய அரசியல் பூகம்பம் — இம்மாதிரி நெருக்கடியான சமயத்திலே, தேசமஹாஜனங்களோட மனது ஒரே குழப்பமயமா இருக்கிறபோது, பயங்கரமான பிரச்னை கிளம்பி பொதுஜனங்களை அலட்டி எடுக்கிறபோது, என்ன ஆகுமோ, ஏது ஆகுமோன்னு அவா அவா அலறிண்டிருக்கிற சமயத்திலே, இவர், இப்படி வாயை மூடிண்டு இருந்தா, என்னன்னு நினைக்கிறது. ஆபத்தானவேளை......"

"ஆபத்தான வேளை என்று நீர் நினைக்கிறீர், உம்மைப்போல பல பேர் எண்ணிண்டிருக்கா — அவர் இது ஒரு பிரமாதமான பிரச்னை அல்ல. குடிமுழுகிப்போகிற காரியமல்ல, ஆபத்து ஒண்ணும் இதனாலே ஏற்படாதுன்னு, ஒருசமயம் எண்ணிண்டிருக்கக் கூடும்"

"நாமெல்லாம் அப்படி இருக்கலாம்—அவர் இருக்கலாமோ—அவருடைய 'சேவை'யை எதிர்பார்த்துண்டு தேசத்திலே இலட்சோபி இலட்சம் பேர் இருக்கா......"

"கோடானு கோடிபேர் இருக்கா......யார் இல்லை என்கிறது"

"கொழுக்கட்டை போட்டுண்ட மாதிரியா இருக்கறதோ, வாய்திறவாமல். இப்படியா அவர் இருக்கற வழக்கம். அவ்வப்போது கிளம்பும் பிரச்னைகளை, உடனுக்குடனே அலசி அலசிக் காட்டி அழகாக வியாக்யானம் தந்து வருபவரல்லவா......"

"ஆமாம்—இந்தப் பிரச்னை, அவ்வளவு முக்கியமானது அல்ல என்பது அவர் அபிப்பிராயமாக இருக்கலாம். அதைச் சொல்வானேன், நாம் மௌனமாக இருந்தாலே, புரிந்து கொள்கிற புத்தியுள்ளவான்னு, இப்படி இருக்கக் கூடும்"

நேரு—தாண்டன் தகராறு, முக்கியமான பிரச்னை அல்லவா! ஓய்! யாரை ஏமாத்தப் பாக்கறீர். காங்கிரசுக்கே ஜீவன, ஜவாஹர்—அவர், நான் போறேன் வெளியே என்கிறார், தாண்டன் துளிகூட மாறவில்லை — பயங்கரமான ஆபத்தல்லவா......இந்தப் பிரச்னை, அவருடைய கவனத்தை இழுக்கவேண்டிய அளவு முக்கியமானது அல்ல, என்று சொல்றீர......"

"அப்படி அவர் எண்ணிண்டிருக்கக் கூடும்னு, யூகமாச் சொன்னேன்—தீர்மானமாச் சொல்லல்லே...!"

"கோபம் வர்ரது ஓய்! உம்ம போக்கு, இப்படி, காங்கிரசுக்கு ஆபத்து, தலைவர்களுக்குள்ளே தகராறு கிளம்பறபோதெல்லாம், இவர்தானே தலையிட்டு, நிலைமையைச் சமாளித்து, சமரசம் செய்யற வழக்கம்......"

"ஆமாம்"

"ஆமாம் என்கிறீர்—இப்ப ஏன் மௌனம்னு நான் கேட்கறேன்—நான் மட்டும் இல்லை ஓய்! நாடு கேட்கறது"

"சொன்னேனே பதில். அவர், தலையிட்டுத் தீர்த்துவைக்க வேண்டிய அளவு, முக்கியமோ ஆபத்தோ, நெருக்கடியோ கொண்டதல்ல, இந்தத் தகராறு என்று அவர் எண்ணிண்டிருக்கக் கூடும்"

"தாண்டன் — நேரு, தகராறு, வெறும் விளையாட்டு, என்கிறீரா? பத்திரிகைக் காராளோட தரடா? என்ன ஓய்! உம்ம நினைப்பு! ஊர் கொதிப்பா கொதிக்கறது......அவர் மௌனமாக இருக்கார்......நீர் அவருடைய சிட்கோடியென்னே...... நீரும் அதனாலே என்ன என்கிறீர் ......நேக்கு, இந்தப் போக்கு சரின்னு படல்லே......"

"ஆயாசமாப் பேசறீர்...உம்ம மனசை இந்தப் பிரச்னை குழப்பி விட்டிருக்கு......"

"கல்லுப்பிள்ளையார் கூட குழம்பும் ஓய்! பத்திரிகை பூராவும் இதே விஷயம் தானே......"

"ஆமாம்...அவர், இவ்வளவு பிரமாதப் படுத்த வேண்டிய பிரச்னை அல்ல என்று நினைச்சிண்டிருக்கார் போலிருக்கு."

"தகராறு, தானாகத் தீர்ந்துவிடும்னு நினைக்கிறாரோ!"

"இருக்கலாம்"

"அதையாவது சொல்லித் தொலைக்கப்படாதோ ஏன், அவாளவாளுக்குத் தோணுகிறபடி உளறிண்டிருக்கேள்—பிரமாதமான பிரச்னை ஒன்றுமில்லை — கூரையிலிருந்து புகைகிளம்பினா, வீடு பத்திண்டு எரியறதுன்னு தானா எண்ணிண்டு பதறவேணும், சமயல் செய்கிறா, அந்தப்புகை வெளியே வந்திண்டிருக்குன்னு எண்ணப்படாதோ — என்று ஏதாவது சொல்லிவைக்கலாமேல்லோ..."

"சொல்லலாம்...ஆனா, அது கூட அவசியம் இல்லைன்னு எண்ணிண்டிருப்பார்..."

"மேதாப் பேசறார், மிஸ்ரா பேசறார், சுக்லா பேசறார், நம்ம சுப்ப

7-ம் பக்கம் பார்க்க

மறைந்த வ. ரா.

திராவிடநாடு

ஞாயிறு] 2—9—51 [காஞ்சி

பொன் வாத்து

பொன் முட்டையிடுகிறது வாத்து, பூரித்துப் போனான் அவன்!

ஒரு முட்டையளவு தினமும் தங்கம் சேர்ந்தபடியிருந்தது, அவனிடம்!

தங்கத்தைப் பார்க்க அவன் உள்ளம் வீங்கியது!

அருமையான வாத்து! பொன் முட்டை தருகிறது! இதனைப் பெற்றவனே பாக்கியசாலி என்று தனக்குள்ளாக சொல்லிக் கொள்ளாத நேரமில்லை

பொன் தினமும் வளர வளர, அவன் உள்ளத்தில் பேராசையும் பேருருவாகி விட்டது!

ஒரு நாளைக்கு ஒருமுட்டைவிதம் எடுப்பதே, மிகவும் சோம்பேறித்தனமாகப் பட்டது!

வாத்தின் வயிற்றிலேதானே இருக்கின்றன முட்டைகள்! ஒரே நாளில் வாத்தின் வயிற்றிலுள்ள முட்டைகளையெல்லாம் எடுத்துவிட்டால் பொன் முட்டைகள் எல்லாம் ஒரே நேரத்தில் கிடைக்குமே!—இப்படி அவன் எண்ணினான்.

கத்தியைத் தீட்டினான். வாத்தின் கழுத்தை அறுத்தான்!

அந்த ஆத்திரக்காரன் ஏமாந்தான்! அன்று விட வேண்டிய ஒரு முட்டைதானிருந்தது. எடுத்தான். வாத்து செத்து விழுந்தது.

பிறகு தேம்பினான், அழுதான், வாத்து செத்தது, செத்ததேதான்!

இப்படியொரு கேலிப் படத்தை, நகைச்சுவை நல்குவதற்காக நாட்டில் உலவுவதாக குறிப்பிடப்படும் ஆனந்தவிகடன் வெளியிட்டுள்ளது!

இந்தக் கேலிச்சித்திரத்தால், விகடன், விளக்கமுயற்சிப்பது, சென்னை சர்க்காரின் புதுவரித் திட்டங்களால் ஏற்படும் கேடுகளை!

வரி கொடுக்கிறார்கள் மக்கள் என்பதற்காக, ஒரேயடியாக வரி மேல் வரிவிதித்து வசூல்செய்து விடலாம் என்று எண்ணுகிற சர்க்கார் இருந்தால், பொன் முட்டையிடும் வாத்தின் சொந்தக்காரன் போலத்தான், ஏமாறுவர் என்று படம் காட்டுகிறது!

நல்ல பாடம்! இருந்தாலும் அது கேலிக்குத் தீட்டப்பட்ட படம்!

* * *

சென்னை சர்க்கார் புதுவரிகள் போடுகிறார்கள். அவர்கள் வரிபோடுகிறார்களே ஒழிய, வரி தரும் மக்களின் வாட்டத்தைப் போக்கவில்லை! இது மக்களிடம் பரவியுள்ள எண்ணம்.

அதுவும், மக்களிடம் வறுமையும், சிறுமையும் இல்லாமலிருந்த பொழுது விதிக்கப்பட்ட வரிகுறைவு-இன்று அதிகம்! இது வரி விதிப்பு கணக்கு காட்டுகிற பாடம்.

அது மட்டுமல்ல, வரி விதிக்கிற காங்கிரசாட்சியாளர்கள், பதவிக்கு வருமுன், வரியென்பதே தவறு, வெள்ளையர்கள் வரியால் கொள்ளையடிக்கிறார்கள், எங்கள் ஆட்சியில் எத்தனை வரிகளைத் தள்ளுகிறோம் பாருங்கள், எத்தனை வரிகளைக் குறைக்கப் போகிறோம், பொறுத்திருங்கள் என்று பேசியவர்கள்!

இப்படிப் பேசி பீடமேறிய அவர்கள், முன்னிருந்த வரிகளை உயர்த்தியுள்ளார்கள்! புதியவரிகளை ஆண்டுதோறும் போட்டபடியேயிருக்கின்றனர்!

வரியில்லாத ஆட்சி நடத்தும் வல்லவர்கள், ஆட்சிக்கு வராத போது, நாம் தந்த வரியையும், இப்பொழுது இந்த பாரதபுத்திரர்கள் நடத்தும் பூரண சுயராஜ்யத்தில் நம்மிடம் பிழிந்தெடுக்கப்படும் வரிப் பணத்தையும் பாருங்கள்.

சிந்தித்தால், சிந்துவீர்கள் கண்ணீர்! சீற்றம் நிறைந்தால், சிந்தச் செய்யலாமா செந்நீர் என்றுகூட எண்ணுவீர்கள்!

இந்தப் புள்ளிக் கணக்கு, நம் கண்களைத் திறக்கும்!

பத்தே ஆண்டுகளில், நாம் தரும் அரசிறை, மடங்கிலிருந்து மலையாக உயர்ந்திருக்கிறது.

நம் மாகாண கணக்கைமட்டும் இங்கு பார்ப்போம்.

1938—39ல் வரி

16,13,45000

1949—50ல் வரி

55,75,32000

உயர்ந்த சதவிகிதம்

3.46

பத்து ஆண்டுகளில், முன் தந்ததைப்போல $3\frac{1}{2}$ மடங்கு அதிகம் தருகிறோம்.

நம்மை ஆளவந்த குணசீலர்களோ, மக்கள் நலனே, எங்கள் வாழ்வும், வளமும் என்று கூவிடாத நேரமில்லை!

இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், பாரதப் புத்திரர்கள் பாதம் பட்டது, ஆட்சிபீடங்களில் உடன், வரி உயர்ந்தது, வாழ்வு சரிந்தது!

இப்படி, வரிப்பளுவை, தாங்க முடியாத அளவு பெரிதாக்கிவிட்ட இவர்கள்தான், வாய்கிழியக் கூவுகிறார்கள், மக்கள் சர்க்கார் என்று!

1939ல், ஒருவன் ரூ 3—6— வரி தந்தான் என்றால் 1950 ரூ. 10—5—7 தருகிறான்!

வளர்ந்துகொண்டே சென்றுள்ள வரிச்சுமை போதாதென்று சென்னை சர்க்கார் இன்னமும் எ

தந்த வழிவகைகளில் வரியைஉயர்த்தலாம் என்று பார்க்கிறார்கள்!

இதனைப் பார்க்கும்பொழுது, பொன்வாத்தை, வெட்டியஅவசரக்காரனே, நம் நினைவில் வருகிறான்.

தங்க முட்டை, மக்கள் தரும் வரி! அது தினமும் ஒன்று தருவது போல, குறிப்பிட்ட வைகளில், ஓரளவுதான் மக்கள் தருவர்! ஒரே சமயத்தில்எல்லாவற்றையும்எடுத்து விடவேண்டும். என்று அவசரப்பட்டால், வாத்திழந்தவன் வேதனை தான், இந்த வாழ்விழக்கப்போகும் காங்கிரசாட்சியாளர்களுக்கும்!

* * *

நாட்டின் ஆட்சியை நடத்திச் செல்பவர்களுக்கு, நாட்டோரிடம் வரி பெறுவது தவறென்பதல்ல, நாம் குறிப்பிடுவது!

வரிதர இசைகிறார்கள் மக்கள் என்பதற்காக, வரியை வாரி வாரி யிறைப்பதா என்பதுதான் நம் கேள்வி;

சர்க்காரை நடத்திச் செல்ல, பல வகைகளில், மக்கள் பணந் தருகிறார்கள், சர்க்காருக்கு!

வரியாக தருகிறார்கள்! வேறு உருவங்களிலும் வழங்குகிறார்கள்!

வரியிலே, நேரடியாகச்செலுத்துவதும் உண்டு, மறைவாகவும் வசூலிக்கப் படும்!

மாகாண வருமானத்திலே, வரிப்பெயரால் வந்த தொகையைப் போலவே, வேறு துறைகளிலும் வசூல் செய்யப்படுவதை நாம் உணரவேண்டும்.

1938–39ல் சர்க்கார் வருமானம் ரூ 69.5 கோடி. 1949–50ல் ரூ 1370-4 கோடியாகும்.

வருமானம் இன்று உயர்ந்திருக்கிறது! கைப்புண்ணை காண கண்ணாடி தேவையில்லை! வரியை அதிகப் படுத்தியிருக்கிறார்கள்! புதிய வரிகளை நுழைத்திருக்கிறார்கள்!

பொன்முட்டைக்காக வாத்தைச் கொல்லப் போகிறார்கள்!

பொது மக்கள், வாத்தாக இருந்தாலும், சத்தற்றவர்களல்ல! அவர்கள் மனதிலே புரட்சி வித்துக்கள் தூவப்பட்டு விட்டால், வாத்தாக இருக்கமாட்டார்கள்! உயிர் வாங்கும் சிங்கமாக மாறிவிடுவார்கள்!

இந்த உண்மை, ஆட்சியாளருக்கு அவசியம் தெரியவேண்டும்.

* * *

இந்த வாரம் சென்னை சட்டசபையில் நடந்த வாதங்களைக் கூர்ந்து கவனித்தால், பொன் முட்டையிடும்வாத்தினை, பேராசையால் வெட்டியவன் கோரக் குரலைக் கேட்டிருக்க முடியும்!

புது வரிகள்—அதுவும் வெகு விரைவில் புகைந்து போகப் போகும், காங்கிரஸ் ஆட்சியில்!

இது, பொன் முட்டைக் கதையைத்தான் நமக்கு நினைப்பூட்டுகிறது!

ஆட்சியாளர்கள், ஆத்திரக்காரன் போல, அவசரப்படக் கூடாது, அதனால் வரும் விளைவைத் தாங்கிக் கொள்ளவேண்டும், புது வரிகளைப் போட்டபடி யிருந்தால்!

இதைத்தான் இந்த நேரத்தில் தரும் பொன் பட்டயம், அவர்களுக்கு!

அதில், வரிகள் வேண்டும், ஆனால், அதற்கு முறையும், நெறியும் உண்டு என்பதை உணரவேண்டும் என்று பொறிக்கப்பட்டுள்ளதைக் காட்டியே, தருகிறோம்!

5-ம் பக்கத் தொடர்ச்சி

ருயன் கூடப்பேசுறார் மந்திரிகளெல்லாம் பேசறு......''

"மந்திரிகள் பேசுவா..."

"இவர் என்ன ஓய்......மந்திரி தானே......"

"அது மட்டுந்தானு! மந்த புத்தி உமக்கு! இவர் மந்திரி மட்டுமா...."

"ராஜ தந்திரியுங்கூடத்தான்...."

"அதனுலேதான், இது தானே அணைந்துபோகக்கூடிய அமளின்னு யூகிச்சிருக்கக் கூடும்...அல்லது..."

"அதென்ன, ஓய்! ஒரு அல்லது போடறீர்..."

"அல்லது, இந்தத் தகராறு இவ்வளவு முத்திண்டிருக்கே, இந்த நேரு, ஏன் நம்மை ஒரு வார்த்தை கேட்கப்படாது—யோசனை கேட்கலாமேன்னோ—இதுவரை கேட்கதாணேம்—நாம் இதிலே தலையிடுவது அவருக்கு இஷ்டமில்லையோவிருக்கு, காமாக ஏன் இதிலே ஈடுபட வேணும், பொறுத்திருந்து பார்ப்போம்னு இருக்கக் கூடும்..."

"அப்படி இருக்குமா......"

"ஏன் இருக்கப்படாது! இருந்தால் ஏன் இது விஷயமா இதுவரை வாய் திறக்கல்லேன்னு கேட்கிறீரே, ஏன், நேரு, தாண்டன், போன்றவர் இதுவரையிலே, இவரைக் கலந்து பேசவில்லேன்னு கேட்டீரே......"

"பேசித்தான் இருக்கவேணும் ......மகாத்மாவுக்கு அடுத்தபடியிலே இருப்பவர் — அனுபவஸ்தர் ......புத்திமான்........அவருடைய யோசனை தேவையில்லையோ. இப்படிப்பட்ட நெருக்கடியிலே... அவரைக் கேட்காமலிருப்பது, தவறு தான்."

"அதனுலேதான், அவரும் நமக்கென்னன்னு இருக்கார்னுசொல்லலாம்........"

"நேத்து சாயரட்சை ஒரு மீட்டிங்குக்குப் போயிருந்தேன் — கேள்வி வந்துட்டுது இதைப்பத்தி —ஒரு போடு போட்டான், பிரசங்கம் செய்தவன், பெரியதலைவர்களுக்குள்ளே இருக்கிற பெரிய விஷயம் அது—நாங்கள் சாமான்யர்கள் நாங்கள் அதிலே தலையிட்டு அபிப்பிராயம் கூறுவது சரியல்ல என்றான்."

"கரகோஷம் செய்திருப்பா!"

"இல்லே ஓய்! ஏதோ முணுமுணுத்துண்டு இருந்தா. அதாவது, அவன்களெல்லாம் பெரிய இடத்து விவகாரம் நமக்கென்ன தெரியும், புரியும்னு பேசலாம் — இவர் பேசலாமோ!"

"அதனுலேத்தான் பேசல்லே."

"ஆனு, இவர் நேரு, தாண்டன் இவாளுக்குச் சமானவர்தானே..."

"சிலவகையிலே, மேலானவர்னு அவாளே ஒத்துக்கொள்கிறு"

"அப்படிப்பட்ட அந்தஸ்திலே இருப்பவர், நமக்கென்னன்னு இருக்கலாமோ?"

"நடக்கிறதெல்லாம் நடக்கட்டும், கடைசியிலே நம்மண்டைவரத்தான் போறு, அப்ப, கவனிப்போம்னு இருந்திண்டிருக்காரோ என்னவோ!"

"அதெப்படி........"

"இப்ப, நேரு — தாண்டன் தகராறைத் தீர்த்துவைக்க, பல பேர் பலதிட்டம் போட்டிருக்கா...

“ஒண்ணுகூடப் பலிக்கக் காணோம்.”

“அதை அவர் தெரிஞ்சுண்டு, நம்மாலே ஆனதை எல்லாம் செய்தாச்சி, பலிக்கல்லே, இனி, அவரண்டே போகவேண்டியதுதான்னு இந்தத் தலைவர்களெல்லாம் தீர்மானிச்சுண்டு வருகிறபோது......”

“ராட்சதாளை அழிக்கவேணும், ப்ரபோ! பரந்தாமா!ன்னு, தேவாளெல்லாம் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியிடம் போனதுபோல......”

“ஆமாம்—பரந்தாமனுட்டமாவே அவரும் புன்னகை செய்துண்டு, பயப்படாதீர்கள், இதோ இந்த ஆபத்தை அழிக்கிறேன்னு கூறி, அபயம் அளிக்கக்கூடும்.”

“இருக்கும் ஓய்! இருக்கும்! இவாளாலே எல்லாம் தீர்ந்துவிடுகிற பிரச்னையா அது........”

“அல்லது நேருவோடே, முன்னதாகவே பேசி, உம்மோட ஏற்பாடு எதுவோ அது எனக்கும் சம்மதம், உம்ம யுக்தம் போலச் செய்யும்னு, சொல்லி, ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம்...”

“செச்சே........! அப்படியிருக்காது...!”

“நாம் ஒண்ணும், தீர்மானமாச் சொல்றதுக்கு இல்லே......அவருடைய மனசு சாமான்யமானதா... என்னென்ன யோசனைகள் உருவாயிண்டிருக்கோ...”

“நேக்கு ஒரு ஆச்சரியம் ஓய்! அவர்தான் வாயை மூடிண்டு இருக்காரே, பேசாமடந்தைகளை எல்லாம் பேசவைக்கிற வித்தைக்காராளாச்சே, நிருபர்கள், இவாகூட, இதுவரையிலே, அவரை பேட்டி கண்டு பேசி, அவருடைய அபிப்பிராயத்தை அறிஞ்சு வெளியிடக் காணோமே ... ஆச்சரியமன்னோ ... இதுவரை, தலைவர்களை, தலைவர்கள்னு எண்ணக்கொண்டிருக்கிறவாளை எல்லாம் சூழ்ந்துண்டு, வாயை கிளறி இருக்கா — டாக்டர் சுப்பராயனுடை அபிப்பிராயத்தைக் கிளறி வெளியே கொண்டு வந்தா. இவரிடம் பலிக்கல்லே, பாருமே...”

“எப்படி, அப்படிச்சொல்லலாம்! ஒரு வேளை அவரை பேட்டி காணப் போகாமலே இருக்காளோ என்னமோ...”

“என்ன ஓய்! இது! விசித்திரமா பேசறீர்! வெறும் வந்தேமாதரங்களை எல்லாம் கூடப் பேட்டி கண்டிண்டிருக்கா, உள்நாட்டு மந்திரி, நம்ம சி. ஆர்........அவரை பேட்டி கண்டு, விஷயத்தை வெளியிட வேணும்னு, எண்ணம் வந்திராது......”

“ஒரு சமயம், இவா, பேட்டி காணச் சென்று அவர் மறுத்துவிட்டாரோ என்னமோ...”

“அப்படி இருக்காதே! மறந்திருந்தாலும், இவாளோட கண்களிலே படாமபடிக்கு மறையப் பார்த்தாலும், பத்திரிகை நிருபர்கள், அதையே கூட வெளியிட்டிருப்பாளே......”

“நீர் சொல்றதும் உண்மைதான்......”

“ஓய்! நேக்குப் பொதுவா என்ன தோண்றதுன்னு, அந்தத் தகராறு இந்தத் தகராறுன்னு, வடக்கே, இப்படிப்பட்ட வம்புகள் அடிக்கொரு தடவை முளைச்சிண்டுதான் இருக்கும் — இந்த வம்புகளிலே தலையிட்டு, மாட்டிண்டு, இவர் ஏன் வீணாகணும், இங்கே நிர்வாகத்துக்குச் சரியானவா இல்லே என்கிற அபிப்பிராயம் வேகமாகப் பரவிண்டிருக்கு — பேசாமபடிக்கு, அவர், இங்கே வந்துட்டா, சிலாக்யமா இருக்கும்னு தோண்றது......”

“அவர் மௌனமாகஇருப்பதற்கு அதுவும் ஒரு காரணமாஇருக்கலாம். நமக்கேன் வீண் வம்பு! நாம் இங்கே இருக்கப்போவதோ இரண்டொரு மாதம்—பிற்பாடு, நம்ம தேசம்போய்ச்சேர்ந்து நம்மாலான சேவையைச் செய்வோம் என்கிற எண்ணம் இருக்கலாம்—அதனாலே, இப்பொ வாய் திறவாமலிக்கலாம்......”

“என்ன ஓய்! இது......எல்லாம், ஒரே ‘லாம்’மயமாப் பேசறீர்—அப்படியும் இருக்கலாம், இப்படியும் இருக்கலாம்னு சொல்லிண்டே போறீர்.....”

“நான் எண்ணத்தைச் செய்ய, நானுந்தான் இந்த ஒரு வாரமா! டில்லி தபால்களை ஆவலா, உடைச்சி உடைச்சிப் பார்த்திண்டிருக்கேன்—அவரிட்மிருந்து ஒரு தகவலும் வரவில்லே......”

“ஒண்ணுமே எழுதல்லையா...”

“ஒரு வரி! இடையவே கிடையாது!”

“அப்படியானா, நான் வர்ரேன் ஓய்! கல்லிலே நார் கிடைக்குமோ.........நமஸ்தே — ஜேஹிந்த்.... வர்ரேன்......”

★

கைதானர்

தங்கவயல் தி. மு. க. செயலாளர் தோழர் டி. கே. சின்னதுரையும், மற்றும் பல தொழில் சங்கத்தோழர்களும் 26—8—51 ஞாயிறு காலை எந்தவித காரணமின்றி கைது செய்துள்ளனர். மேலும், ஒருமாத காலத்திற்கு, எந்தவித கூட்டமோ, ஊர்வலமோ நடத்தக் கூடாதென 144—தடை விதித்துள்ளனர்.

★

விற்பனைக்குத் தயார்!

சி. என். ஏ. வின் புதிய வெளியீடு

★ அதிர்ச்சிக்கு வைத்தியம்! ★

இன்றைய பிரச்னையை விளக்கிடும் ஏடு. பண்டிதநேரு அதிர்ச்சி வைத்தியம் செய்கிறாராமே! அதன் பொருள் என்ன? நோக்கம் என்ன? என்பதை விளக்கும் நூல்!

விலை இரண்டணா, உடனே நமது ஏஜண்டுத் தோழர்கள் தேவைக்கு எழுதவும்.

விவரங்களுக்கு:—

‘திராவிடநாடு’ நிலையம்

காஞ்சிபுரம்.

★ தொடர் கதை

யாத்திரை

தில்லை-வில்லாளன் ★

இராமனின் இதயராணி லீலா என்றபோதிலும் — அவள் அவனிடம் தன் எண்ணத்தை, உணர்ச்சியை அடகுவைத்து விட்டாள்! அவளைப் பற்றி அவன் சுவையோடு சொல்லிக் கொட்டிய வெதுவெதுப்பான கனவுகளோடு, அவள் குடும்பத்தைப் பற்றிய சிறு சிறு குறிப்புகளும் கூறினான். அப்பொழுதுதான் லீலாவின் தமக்கை பத்மா என்றும், அவள் காதல்முறிவு என்ற ஒடத்தி! ஏக்க ஆற்றில், துடிப்புக்களின்றி மிதந்து செல்கிறாள் என்பதையுமுணர்ந்து கொண்டேன். இப்பொழுது புரிந்து கொண்டிருப்பீர்களோ, ஏன் உங்களையே அவன் விரும்பியதற்குக் காரணம்! வரப்போகிற சகலன் அல்லவா அவன்... ஆகவேதான் பார்த்திபனைத் தேடினான் இராமன்.

மைத்துனரே .... இப்பொழுதுதான் தக்கதோர் யோசனை கூறப் போகிறேன். மறுக்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள் மனஅமைதி கிடைக்கும்.

என்க்குபடிப்பு —இல்லை யென்றே கூறலாம். ஆனால் கேள்வியறிவு அதிகம். மாக்கிவெல்லி என்பவர் மன்னன் முடியை நிலைபெறச் செய்ய, பிடியை வலுவாக்க சில திட்டங்களைச் சொன்னாராம். நம் இந்திய நாட்டுசாணக்கியரும் அப்படியேதானாம்! எதைப் பற்றிய கவலையுமின்றி நினைத்த முடிவடைய யாத்

4

பார்த்திபனுக்கு

தினகரன்

திரை செய்யலாம். வழிகள் பழியுடையனவாகிலும் பரவாயில்லை. முடிவு நமக்குத் தேவை ஏற்றதானால் எதையும் செய்யலாம் என்று ஒரு எண்ணக் கரு வளர்ந்தது. அதற்கு ஆங்கிலத்திலே கூட அழகுப் பெயர்களிட்டழைப்பார்கள். அது என் வாயிலும் நுழையவில்லை. நினைவிலும் நிற்கவில்லை. அந்தப் பாதையில்தான், தெரிந்தோ தெரியாமலோ நான் நடக்கிறேன். தங்களையும் அழைக்கிறேன் அன்போடு, தங்கையின் தனியன்பை தனதாக்கிக் கொண்டவர் என்பதால்!

பத்மா, பகிரங்கமாக வெளியேறி விட்டாள். பயப்படாதீர்கள், மணந்த பொன்னியோ உண்மையில் தங்கை; மருண்டு விடாதீர்கள். மார்க்கத்திலே கோளாறுதான், இறுதியிலே இன்பம் அனுபவிக்க வசதி இருக்கிறதல்லவா? ஆகவே, கலங்காதீர், காரியத்தைப் பாருங்கள்; தளராதீர். தங்கள் வாழ்க்கைப் பாதையில் முன்னேறுங்கள். பொன்னியின் வயிற்றிலே ஒரு 'பொன் வண்டு' உருவாகத் தொடங்கிவிட்டது. ஆகவேதான் என் பாதையிலே உங்களையும் அழைக்கிறேன். நான் இப்மாதிரிச் சிக்கலிலே மாட்டிக்கொண்டேன். அதற்காக நெடுநேரம் சிந்தித்தேன். பிறகு வந்த முடிவுதான் இப்பொழுது உங்களுக்குத் தந்தது.

ஒரு யோசனை கேட்கப் போகிறேன்—அதன் சுருக்கத்தை ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன்.

என் 'ஆசையுள்ள நேசச்சான்' என்ற முறையில் மட்டுமல்ல— தெரிந்த வழக்கறிஞர் என்ற வகையில் கூட இந்த உதவி – யோசனை தரவேண்டும்

இராமனின் காதலி லீலாவுக்குத் தெரிந்தவளாகப் போய்விட்டாள், என் கர்மவலையில் சிக்கிச் சீரழிந்த ஒருமான் அவள்! அவளுக்கு எழுத, அதை அவள் இராமனுக்குச் சொல்ல, அவன் என்னை எச்சரித்துவிட்டான். அவளிடம் எவ்வளவோ புத்திசாலியாக நடந்துகொண்டும் என் கடிதங்கள் சிக்கிக் கொண்டன. என்னைப் பற்றி முழுவிபரங்களையும் சேக

ஓடிய கதை

பத்மாவை இழந்த சுந்தரம், வாழ்வையே வெறுத்து, பொதுத் தொண்டே, இனி வாழ்வின் இலட்சியம் என பணிபுரிந்து வருகிறான்.

பத்மாவோ, பார்த்திபனை மணந்து, வாழ்விலே இன்பங் காணாது தவிக்கிறாள்.

பார்த்திபனோ, பொன்னியிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டு மனைவி பத்மாவிடம் பொய்நேசங் காட்டிவருகிறான். பொன்னி கருவுறுகிறாள், ஆகவே விஷயம் வெளியாகிறது. பத்மா புரட்சிகரமான பரிகாரந்தேடுகிறாள். பொன்னியைத் தன் கணவனுக்கு மணம் முடித்து வைத்துவிட்டு, மருத்துவ படிப்புக்கென காரணங்கூறி வீட்டைவிட்டு வெளியேறுகிறாள்.

பத்மாவின் தங்கை லீலா, தன்காதலை இராமன் என்ற வாலிபனுக்கு காணிக்கையாக்குகிறாள்.

அவள் தோழி மங்கை தினகரன் என்ற தெகிடுதத்தக்காரனால் கற்பழிக்கப்பட்டு, அதன்பின் பள்ளியாசிரியையாகவே காலங்கழித்து வருகிறாள்.

பார்த்திபன், இராமனது வழக்கிற்குப் போய் வாதாடி வெல்கிறான்........

ஏகாம்பரம் சூழ்நிலையால் தங்கையை விட்டுப் பிரிந்து விட்டான். மங்கையோ, தினகரன் எழுதிய கடிதங்களை வைத்துக் கொண்டு வழக்கு தொடுக்க வழி பார்த்துக் கொண்டிருந்தாள்.....

ரித்து விட்டாள், அவளது நண்பன் மாதவன் என்ற தந்திரக்காரன் மூலம்! அந்தக் கடிதங்களைக் கொண்டு என்னை ஏதாவது சட்டப்படி செய்ய முடியுமா என்று அறிந்து கொள்ளவேண்டும்.

என் காம விளையாட்டுக்குக் கிடைத்த உருட்டு பொம்மையின் பெயர் மங்கை. அவள் சிறகொடிந்த பறவை போல ஒருநாள் இரவு என்னிடம் அடைக்கலமாக வந்து சேர்ந்தாள். வழக்கம் போல நடந்து விட்டேன். இப்பொழுது வம்பில் மாட்டிக் கொண்டேனே என்று அச்சப்படுகிறேன். அவள் எழுதிய கடிதங்களையும் கொளுத்தி விட்டேன். என்ன செய்யலாம்..... எனக்கு ஏதுவும் புரியவில்லை.

அவளை மணக்கவும் முடியாது. மறுக்கவும் முடியாத நிலை ஏற்பட்டு விட்டால்....பார்த்திபரே, என் சிக்கல் தீர ஒரு வழிகாட்டுங்கள்.

நல்வாழ்வு என்ற அடிவானத்திற்குச் செல்லக் கண்டுபிடித்த குறுக்குப்பாதை சூது, சூழ்ச்சி, வஞ்சகச் சல்லிகளாலாக்கப் பட்டது! அதில் நடந்து சென்றுவிடலாம் என்று நம்பிக்கொண்டு வெகுவேகமாகச் சென்றேன்....நடந்தா.... இல்லை, இல்லை கண்களை மூடிக் கொண்டுஓடினேன்....இப்பொழுது சறுக்கிவிழுந்து விட்டேன்..கை கொடுத்துக் காப்பதுன் பாரமப்பா!

மங்கை வந்தாள் வலுவில் என்னிடம்—நான் என்ன செய்யட்டும்? என் மனச்சாட்சி சதை, நரம்புகளால் ஆகியிருந்தால் கொஞ்சமாவது நடுங்கியிருக்கும். அது இரும்பாக்கப்பட்டு எத்தனையோ ஆண்டுகளாகிவிட்டன! ஆகவேஎன்சதைப் பசை பதைப்புக்கு அவளைப் பலியிட்டுவிட்டேன். அவள் கொஞ்சம் படித்தவளாகவே விழித்துக் கொண்டு என்னை மிரட்டப் பார்க்கிறாள்.

அந்தியானவுடன் சிவப்புச் சிரிப்பைச் சிந்தும் அந்த வான் முகப்பைப் பார்த்து வாய்பிளந்து வியந்துரைக்காத கவிஞன் யார்? கலைஞன் இருக்கிறானா..,மனிதன் :உண்டா... அந்த அழகு மழையிலே குளித்து முழுகுவதிலே ஒரே ஆனந்தம் — வான்முகடுதான் பெண்சுகம் என்ற பெரும் சுகம்..................அதைப் பார்த்து நானும் வியந்தேன் கிட்டத்தில் கிடக்கிற சுகத்தை எப்படி உதைத்துவிட்டு நான் எப்படிச்செல்வது? முடித்துவிட்டேன். முணு முணுத்தாள் அவள், சாக்குகள் சொல்லித் தள்ளிவைத்தேன். இப்பொழுது 'முகாரியை' விட்டு விட்டு 'அடாணா'வில் ஆரம்பித்து விட்டாளே!

பார்த்திபரே, என்னைத் தவறாகப் புரிந்துகொண்டுவிடாதீர்கள். நான் தங்கள் நண்பன். உண்மைகள் பலவற்றை என்இதயத்தில் புதைத்துக்கொண்டு சமயங்களில் அந்த சமாதியைவிட்டுக்கிளப்பிவிடுவேன். அப்படித்தான் இந்தச்சந்தர்ப்பத்திலும் உண்மைகள் சிலவற்றைச் சொல்லியிருக்கிறேன். எப்பொழுதும் இலாபநோக்கத்தோடு எதையும் செய்வது என் பழக்கம். அப்படியொன்றும் இப்பொழுது எதையும் எதிர்பார்த்துப் பேசவில்லை. ஆனால் அந்த மங்கை வகுத்திருக்கும் திட்டத்தினால் நான் பாதிக்கப்படாமலிருக்க வழி வேண்டும். எனக்குப் பலவழிகள் தெரியும். ஆனால் ஆட்சி மன்றத்து விதி முறைகள்படி ஏதாவது செய்ய முயற்சித்தால் நீங்கள் என்னைக் காப்பாற்ற முன்வரவேண்டும். அதுதான் இப்பொழுது வேண்டுவதின் உயிரான கருத்து— விண்ணப்பம்! அவள் முயற்சியிலே தோல்வி கண்டு துவண்டிருக்கும் பொழுது அவளைக் கண்டபடித் திட்டவேண்டும். தினகரனின் தீரத்தைத் தெரிவிக்கவேண்டும்!

இப்பொழுது கொஞ்சம் சிந்தியுங்கள்.

கண்களை விசாலமாக்குங்கள்—

பத்மா... பொன்னி.... இருவரும் ஏதோ தூரமாக விலகிச் செல்வது போலவே தெரியும். அது வெறும் பிரமை. நீங்கள் பின்னால் நடந்து செல்லச்செல்ல அவர்கள் முன்னாலேயே போய்க் கொண்டிருப்பது போலவே தெரியும். அதுவும் மனத்திலே ஊசலாடும் அடிப் படையில்லாத கற்பனை.... மனம்பின்னும் அணுக்களின் நிழலாட்டம்! அவர்கள் உங்களின் பிடிப்பிலேயேஇருக்கிறார்கள். ஆனால் என் கதைவேறு—முறையுமாறானது. மங்கை என்னை நாடி நடந்தாள். நான் விலகிக் கொண்டே வந்தேன். இப்பொழுது நான் நிற்கிற இடம் அவள் கண்களுக்குத் தெரியவில்லை. அவள் நிற்கிற இடம் எனக்குப்புலப்படவில்லை. சீதையைத் தனியே விடுத்துச் சென்ற இலக்குமணன் ஒரு கோடிட்டுவிட்டு...இதைத் தாண்டிச் செல்லாதீர்கள் அண்ணியாரே என்று கூறிப் பிரிந்தானாம். வே... மிட்டு வந்த இலங்கை வேந்... பிச்சை கேட்டு, அக்கோட்டை தாண்டச் செய்து, அந்தப் பச்சைக் கிளியை தன் இச்சைப்படி சிறை யிட்டுச் சென்றானாம். அதன்ப... நான் ஒரு கோடிட்டேன். அந்த கோட்டைத் தாண்டி விட்டாள் அவள். அந்தக் கோடுதான் அதோ தெரிகிறதே வானமும், பூமியும் கட்டியணைத்திடும் அந்தி சந்திப்பு அந்த அடிவானத்திற்கு அப்பால் அவள் போய்விட்டாள். இனி அவளை நான்பார்க்கவும் முடியாது. அவளும் என்னை அடைய முடியாது. ஒன்று சேராத இரண்டு முனைகளுக்குச் சென்று விட்டோம். உலகத்தில் என்னைக் காட்டிக் கொடுக்கத்துடிக்கிறாள். நான் மட்டும் விட்டு விட முடியுமா? அவளை விபசாரியென்று ஊர் முழுவதிலும் செய்தி பரப்பிடத் திட்டம் வேண்டும். அதற்காகவே மாதவன் என்பவனை நண்பனாக்கினேன். அவனோ எனது குறைபாடுகளையெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டுபோய் அவளிடம் சேர்த்திருக்கிறான். அவன் பைத்தியக்காரன்.... ஊர் அறிந்த செய்தியைச் சொல்ல இவன் யார்? தானாகவே பரவக் கூடியதைத் தேடி வந்து பிடித்து போயிருக்கிறான். குளிர்காலத்து ஈசலைக் கூப்பிட ஆள் ஏன், 'தேள்' ஏன்... தெருப் புழுதிபோலக் கிடக்கும் எல்லா இடங்களிலும்!

பார்த்திபரே, வானவில்லைப் பார்த்து உலகமே வியக்கிறது. ஏன்? விசித்திர வானச்சேர்க்கையைக் கண்டு தானே! அப்படியானால் என்னையும் பார்த்து உலகுவியக்கவேண்டும். என் குண விசித்திரங்களின் இணைப்பைக் கண்டு ஏன் வியக்கக் கூடாது? வியக்கட்டும். ஆனால் எழிலைஇரசித்துவிட்டு அதையடைய யாரும் முயற்சி எடுத்துக் கொள்வதில்லை, முடியாது என்ற முடிவான எண்ணத்தால்! ஆனால் என் அனுபவ உண்மைகளைப் பலர் கையாள்வார்கள்— ஆனால் அது வெளியில் தெரியக் கூடாது என்பதற்காகப் பெரும்பாடு படுவார்கள். ஆனால் இந்த வானவில் தான் இன்றைய உலகத்திற்கு ஏற்ற தோற்றம் என்பது என் முடிவு. (தொடரும்)

வானம்பாடி மறைந்தது

★

வானத்திலே பறந்திட்ட அழகு வானம்பாடி, வ. ரா.

எழுத்து வானத்தில், எட்டாத கருத்துயரத்தில் சிந்தனைச் சிறகு கட்டிப் பறந்திட்ட, வானம்பாடி, அவர்.

இந்த வானம்பாடியை வீழ்த்த வைதீக வல்லூறு வட்டமிட்டபடியே இருந்தது! பழமைக் கழுகும் பறந்தபடி தானிருந்தது! புரோகித வேடனின் அம்போ, சமயம் பார்த்துக் கொண்டிருந்தது!

ஆனால், எதுவும் வானம்பாடியை வீழ்த்தவில்லை — வீழ்த்த முடியவில்லை!

தன் இச்சை போல் பறந்து கொண்டிருந்தது, அந்த அழகு வானம்பாடி!

வ. ரா. பிறப்பால், அந்தக் குலம், பிறவற்றாலோ, அவர் நம்மவர், நல்லவர்!

அவர் அக்கிரகாரத்திற்கு ஒரு அபாய அறிவிப்பு!

வைதீக புரிக்கு அவர் நடமாடும், எச்சரிக்கை பலகை!

புரோகித உலகில், அவருக்குப் பெயர் பொல்லாதவர்!

ஆனால், நமக்கு வ. ரா. ஒரு அரிய வரவு! நல்ல பரிசு! சுவையான விருந்து!

அவர் கருத்து காலத்திற்கு ஏற்றது, நாட்டுக்குகந்தது, நமக்குத் தேவையானது!

அவர் எழுதுகோலை குலம் வளைத்ததில்லை!

அவர் எண்ணத்தை, கோத்திரம் கருக்கியதில்லை!

அவர் கருத்தை, சாத்திரம் சாய்த்ததில்லை!

அவர் எழுத்து வழக்கு நிலமுமல்ல—சருக்கல் சேறு நிறைந்ததுமில்லை!

எதையும் தெளிவாகச் சொன்னார். தேவையான அளவு சொன்னார். இடையில் நிறுத்தியதில்லை!

அவர் உள்ளதை, உள்ளபடி கூறியதால், பலருக்கு அவரிடம் வெறுப்பு, பகை!

அத்தகைய எழுத்து வானத்தின் வானம்பாடியை நாம் இழந்து விட்டோம்.

அவர் மறைவு, நிறைவு செய்ய முடியாததுதான்!

எந்த இடத்தில் எவை வாராவோ, அவைகள் அத்தனையும் வரும் என்று நாட்டுக்கு அறிவித்தவர், வ. ரா.

விஷக்குளத்தில் கிடைத்த புத்தமுது அவர்.

கள்ளிக் கிடையே, நமக்கு கிடைத்த காட்டு ரோஜா, அவர்.

பாலைவனத்தினிடையிலுள்ள சோலை, அவர்.

ஆம், புரோகித புரியிலே, நமக்கு கிடைத்த எதிர்பாராத செல்வம்!

அவர் அக்கிரகாரத்தில் உதித்த அதிசயப்பிறவி. ஆனால் நாடோ, அவரை அவசியப் பிறவியென்று போற்றிற்று. இன்று பிரிவால் பொருமுகிறது! அழுகிறது!

அந்த துக்க ஊர்வலத்தில், நமது விங்கிய இதயங்களும் வீதி வலம் வருமாக! ❀

'ஐயோ, அரிசியே!'

★

விளங்கவில்லையாம் அவருக்கு! ஆகவே, விளக்கம் கேட்கிறார், மத்திய மந்திரிசபையிடம்!

மந்திரியார் மந்தமதி கொண்டவர் என்று நாம் கூறவில்லை. ஆனால் அவரே, கூறுகிறார், விளக்கம் [illegible]!

சென்னை, உணவு மந்திரி கனம் ரோச்விக்டோரியா, இப்படிக் கூறுகிறார்.

பார்லிமெண்டில் உணவு உதவி மந்திரி திருமல்ராவ் பேசியது பற்றிக் கேட்டபொழுது, மந்திரியார் கூறியுள்ளார்.

அவருக்கு விளங்கவில்லை! விளங்காது தான்! விளங்கினாலும் விளங்கியதாகக் காட்டிக்கொள்ளக் கூடாததுதான்!

ஏன் என்பீர்கள்? அவர் மந்திரியாக அல்லவா இருக்கிறார்! அதனால் தான் விளங்கினாலும், விளங்காது போல்விழிக்க வேண்டியிருக்கிறது.

டெல்லியில் திருமல்ராவ் என்ன கூறிவிட்டார், புரியாத முறையில் என்பீர்கள்! அவர் புரிந்திடும் முறையிலேயேதான் பேசியுள்ளார், கை விரித்துள்ளார்!

கப்பல் போக்கு வரத்து வசதியில்லையாம்! ஆகவே உணவுப் பொருள் காலதாமதமாகுமாம்!

ஆகவே, அமைச்சர் அறிவித்து விட்டார்! என்ன அறிவித்திருக்கிறார் என்று கருதுகிறீர்கள்?

'எந்தக்கவலையும் உங்களுக்கு வேண்டாம்! கப்பல் வசதியில்லாவிட்டால், அத்தகைய வசதிகளைத் தேடிப் பெற்று உங்களுக்கு உணவு தருகிறோம் என்று கூறவில்லை!

சென்னை, எதற்கும் வளைந்திடும் என்று எண்ணியுள்ளார்கள்.

ஆகவே, சென்னைக்கு எப்பொழுதும் சீரழிவுதான்!

எதற்கெடுத்தாலும் டெல்லி, இப்படி அடிக்கிறது!

அடிக்கிறதென்றால், வயிற்றில் அடிக்கிறது!

மாதத்திற்கு 30,000 டன் அரிசி தருவதாக சென்னைக்கு வாக்களித்திருந்தார்கள், முன்னர். அது இப்பொழுது முடியாதாம்!

இந்த ஆண்டு இறுதிவரை தர வேண்டிய 200000 டன் அரிசிக்குப் பதில் 125000 டன் அரிசியே தரப் போகிறார்களாம்.

வழுக்கு மரம் ஏறுகிறார்கள்! சருக்கி, சருக்கி விழுகிறார்கள்!

இதைத்தான் சென்னை மந்திரிக்கு விளங்கிக்கொள்ள முடியவில்லை!

ஆனால் மக்கள் நன்றாக விளக்கம் பெற்றுள்ளார்கள்!

இந்தத் துயரத் தொடர்கதைக்கு கடைசி அத்தியாயம், டெல்லி தொடர்பை அறுத்தெறிவது என்பது!

அந்தக் கடைசி அத்தியாயத்தின் முதல் அத்தியாயமாகவே, இந்த 'ஐயோ, அரிசியே!' இருக்கட்டும்!

Edited, Printed & Published by C. N. Annadurai M. A at "DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.